# பாலியர்  நேசன்.

நானே நல்ல மேய்ப்பன்.

குழந்தைகளை என்னிடத்தில் வரவிடுங்கள், தடைபண்ணாதிருங்கள்.

௩ம் புத்தகம்.] யாழ்ப்பாணம் ௲௮௱௬௰௬ம் ௵ மாசி ௴. இதன்விலை வருஷம் ஒன்றுக்கு, அரை ரூபாய். [சங்கியை ௨.

### பத்திரத்தின் விலை.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு பிரதிவாங்குவோர்க்குவிலை | | | சி. | ௧ |
| ஒரேமுறையில் ௧௦ | " | " | " | ௯ |
| ௨௦ | " | " | " | ௧௭ |
| ௨௫ | " | " | " | ௨௧ |
| ௫௦ | " | " | " | ௪௦ |
| ௧௦௦ | " | " | " | ௭௫ |

தபாற்செலவு பிறம்பாய்வரும்.

### SUBSCRIPTIONS FOR 1865.

| | £ | s. | d. |
|---|---|---|---|
| Mr. R. Asbury | | 4 | 0 |
| Mr. C. Atwood, Odiar | | 1 | 0 |
| **1866.** | | | |
| Mr. R. David, Bombay | | 1 | 6 |
| Mr. A. N. M. Ibrahim | | 2 | 0 |
| Mr. P. Joshua | | 1 | 6 |
| Mr. S. Maarimootoopully | | 1 | 6 |
| **DONATIONS.** | | | |
| Mr. P. Joshua | | 2 | 6 |
| Mr. J. W. Armstrong | 1 | 0 | 0 |

### மாசிமாதம்.

இம்மாதத்துக்கு இங்கிலிஸ்பாஷையில் பெப்ருவரி என்றுபேர். ரோமர் இந்தமாதத்திற் பலிமுதலியவற்றால் சுத்திகரிப்பைச் செய்வதால், சுத்திகரிப்பின் மாதமெனப்பேரிட்டார்களென்று எண்ணப்படுகின்றது. இம்மாதத்தை நியுமா என்பவர் ஏற்படுத்தினர். சைவர் முதலியோர் இம்மாதத்தில்கண்விழித்துசிவராத்திரிவிரதம் அனுட்டித்து ஊஞ்சலாடிக்கொண்டாட்டங்கொள்வார்கள். மோட்சபதவி பெறுவதற்கே கண்விழிப்பார்கள். கண்விழிப்பதற்கே ஊஞ்சலாடுவார்கள். கடதாசி விளையாடுவார்கள். நடனஞ்செய்வார்கள். கட்டையுருட்டுவார்கள். சொக்கட்டானாடுவார்கள். உடுக்குத்தட்டிச்சிற்றின்பப்பாடல்களைப்படித்து நவினஞ்செய்வார்கள். இவைகளெல்லாவற்றையும் இராமுழுவதுஞ் செய்ததின்மேற் தீர்த்தமாடுவார்கள். தீர்த்தமாடுதற்கு யாழ்ப்பாணத்திற் கீரிமலையும், இந்தியாவில் காசி, இராமேசுபுரம் விசேஷஸ்தலங்கள் என்பார்கள்.

பிள்ளைகளே, மோட்சபதவி அடைவதற்கு அறியாமையுள்ள சனங்கள் தேடும்வழியைப் பாருங்கள். சகல பாவத்தையுஞ்செய்து கண்விழித்துத் தீர்த்தமாடினாற் போதுமென்று எண்ணுகிறார்கள். "காசிக்குப்போனாலும் கன்மந் தொலையாதே ஊத்தைபோனாலும் உன்வினை போகாதே" என்னும் பழமொழியை மறந்தார்கள். யேசு இரட்சகர் பெருமானின் திரு இரத்தத்தில் ஆடி விசுவாசிப்பதே சகல பாவத்தையும் போக்குமென நம்புங்கள். அவரே பாவநாசர். அவர் மூலமாக இரட்சிப்பைத் தேடுங்கள்.

### ஒருபோழுதும் பிடிக்கக்கூடாது.

பிள்ளைகளே, காற்றின் சிறகை நீங்கள் எடுத்துப் பறந்தாலும் ஒரு பொழுதும் பிடிக்கக்கூடாத பொருள் ஒன்றுண்டு. அது என்ன? உங்கள் உதடுகளினின்று பிறந்த தீய வார்த்தையே, கெட்ட பேச்சே, தூஷணமே. நீங்கள் பேசினது பேசியாயிற்று. அதை மாற்றுவதற்கு உங்களால் கூடாது. ஆகையால் நீங்கள் பேசுவதைக் குறித்துச் சாவதானமாயிருங்கள். கடுஞ்சொல் கடுவார்த்தை என்பவைகளைக் குறித்து எண்ணிப் பேசுங்கள்.

### நான் ஒரு போல்லாதவன்.

காலிபோணியா என்னும் மாகாணத்திலுள்ள ஓர் ஆயத்துறையில் களவெடுத்த காரியத்தின்பேரில் ஒரு மனுஷனுக்கு ஒருவர் நியாயதுரந்தரராக நிற்கவேண்டிவந்தது. குற்றவாளி நடு வயசுள்ளவன். அவன் தேகம் புஷ்டியானது. அவன் தன் கைகளினால் வேலைசெய்து சீவனம்பண்ணி காலம்விடக்கூடிய சுகசரீரமுள்ளவன்.

உன்மேற் சாற்றப்பட்ட குற்றத்துக்கு நீ என்னசொல்லவிருக்கிறுயென்பதை எனக்கறிவியென்று நியாயதுரந்தரன் இவனை ஒரு பக்கலில் நிறுத்திக் கேட்டவிடத்தில் நான் ஒரு பொல்லாதபையனாகவிருந்தாலெனப் பாயிரங்கட்டிச் சில காரியங்களைச் சொல்லுவான். நான் இன்னகாரியத்தில் குற்றவாளியாக்கப்பட்டு இன்னமறியற்கூடத்திலிருந்த நான். இந்தக்களவு நடந்த அன்றையிற்றினம் நான் அவ்விடமில்லை, அதற்கு நீ ஒப்பனை விடுவியா என்றதற்கு, சிந்தனை கலங்கி நிலத்தைப் பார்த்துக்கொண்டு இனிக் காரியம் என்ன! நான் பிடிபடுவதற்கு முன் நான் ஒரு பொல்லாத பையனாகவிருந்தேன்; நல்லதும் என்னை எவ்வளவு காலத்திற்கு மறியலில் வைப்பார்களென்றான். அதற்குப் பத்து வருஷந் தொடங்கிப் பதினைந்து வருஷம் வரைக்குமென்று சொல்ல, அப்பா! நெடுங்காலம் அதிலும் நான் செத்துவிடுவது உத்தமம். அவ்வளவுக்கு மறியலிலிருக்கில் தழைந்த கிழவனாய் விடுவேன். சற்றுநேரந் திரும்பவும் முன் சொல்லியபடி நிலத்தைப் பார்த்துத் தன் சென்ற வாழ்வைப் பற்றிச் சிந்தித்து பாதிக்காரியத்தைச் சொல்லிப் பாதிக்காரியத்தை மறந்து நான் ஒரு பொல்லாத பையனாகவிருந்தேனென்று ஊன்றிச் சொல்லுவான். நல்லது நான் தப்பிக்கொண்டால் என் கைகளால் வேலைசெய்து, நல்ல சீவியம்செய்து ஒழுங்காகவிருப்பேனென்று, திரும்பவும் நான் ஒரு பொல்லாத பையனாகவிருந்தேனென்று சொல்லிக்கொண்டு மனங்குழம்பி இருப்பான். தனது சகல தீமைக்குந் தான் பொல்லாத பையனாகவிருந்ததே காரணமென்பது அவன் தீர்மானம். ஆராகுதல்தான் பொல்லாத பிள்ளையாகவிருந்ததினால் தனக்கிவ்வளவு துயரம் வந்ததென்று சொல்லக்கூடுமாகில் அவன் இவனே. அவன் பொல்லாத பையனாகவிருந்ததால் பொல்லாத மனுஷனானனென்பது அவன் அனுபோகத்தாற் கண்டான்.

கடைசியாக அவன் குற்றவாளியாக அவ்வளவு வருஷங்களுக்கிருக்கும்படி தீர்க்கப்பட்டான். ஆனால் மறியற்கூடத்தை அவனும் அவன்கூட்டாளிகளும் முறித்துக்கொண்டு காட்டுக்குள் ஓடி நெடுநாளாகப் பனியிலும் மழையிலும் நனைந்து சாப்பிட ஒன்றுமில்லாமல் தன்னுடைய முந்தின கூட்டாளிகளுளொருவனுடைய வீட்டிற்சேர்ந்து தப்பிவிட்டேனென்று எண்ணினான். ஆனால் துஷ்டர்களிடத்திலும் பத்திரப்பட்டவர்களாயிரார்கள் என்பதைச் சீக்கிரம் அறிந்தான். காட்டில் வழியருகே செத்துக்கிடக்கிறவனாய்ச் சிறிதுநாளையிற் காணப்பட்டான். சந்தேகமின்றித் துஷ்ட கூட்டாளியே அவனைக் கொன்றது. பொல்லாத பையனாகவிருந்த ஒரு மனுஷனுடைய வாழ்வு இப்படி முடிந்தது.

சன்மார்க்கப்பையன் சன்மார்க்க மனுஷனாய் விருத்தனாய் மரிப்பான். துஷ்டப் பையன் துஷ்ட மனுஷனாய் விருத்தனாய் மரிப்பானென்றறியுங்கள்.

### விசுவாசத்தின் பலன்.

வன்றூன் என்னும் நாமதேயமுள்ள ஒருகைம்பெண்ணுண்டு. அவளுக்கு நாலு பிள்ளைகளுண்டு. அவர்களுக்குள் நிச்செட் என்னும் பிள்ளை மூத்தமகன். அவனுக்கு வயசு எட்டு. இவர்கள் மிகவும் வறியவர்களாய் ஒரு சிற்றில்லில் வாசமாய் இருந்தார்கள்.

ஒருநாள் இவர்கள் போசனத்துக்கு யாதொரு ஆகாரமும் அகப்படவில்லை. அந்தப் பிள்ளைகள் பசியினால் வருந்தி மாதாவே, பசிக்கு என்னசெய்வோமென்று கேட்க, அவள், மக்களே என்கையிலே யாதொன்றுமில்லை, என்னசெய்வோம், நாம் ஒருமித்துப் பிரார்த்திப்போம் பேசுகாரருடைய தயவினால் தேவன் நம்மைப் போஷிப்பார் என்று சொல்லிப், பின்பு பிரார்த்தித்தாள். பிரார்த்தனை முடிந்தபின், நிச்செட் என்கிறபிள்ளை மாதாவே பசியாயிருந்த ஒருவனுக்குத் தேவன் காகங்களைக்கொண்டு ஆகாரங் கொடுப்பித்தார் என்று வேதஞ்சொல்லுகிறதே. நமக்கும் அப்படிச் செய்யாரோ என்றான். அதற்கு மாதா அக்காலத்தில் அப்படிச்செய்தார், அது ஆச்சரியமானகாரியம், தேவசித்தமெப்படியோ நமக்குத் தெரியாதென்றாள். அப்பொழுது நிச்செட் நல்லது, ஒருவேளை தேவன் நமக்குக் காகங்கள்வழியாய் ஆகாரமனுப்புவார், அதற்கு இந்தக் கதவு தடையாயிருக்கும் என்று சொல்லி, உடனே கதவை முற்றாய்த் திறந்துவிட்டான். அந்நேரம் ஊர்காவற் தலைவன் ஒருவன் அவ்வழியாய்ப் போகையில் இவர்கள் வீட்டின்கதவு திறந்திருக்கிறதைக்கண்டு, உள்ளேபார்த்தான். அந்த நான்குபிள்ளைகளும் மாதாவும் ஒன்றாயிருக்கிறதைக்கண்டு, தாயே இராக்காலமானதே நீங்கள் கதவுசாத்தாமல் ஏன் திறந்துவிட்டிருக்கிறதென்ன? எப்படிப்பட்ட புத்தியென்றான்? அதற்கவள் சற்றே நாணிநின்ற நிச்செட்டுடைய தலைமயிரில் கைச்சேப்பிட்டு இந்தப் பிள்ளையுடைய யோசனை இது. எங்களுக்காகாரம் ஒன்றுமி

ல்லாமையினால் தேவன் இரங்கிக் காகங்கள் வசமாய் போசனமனுப்பக்கூடும், அதற்கிடங்காதவு நடையாயிருக்குமென்றுசொல்லித் திறந்துவிட்டான் என்றான். அதைக்கேட்டவோர்காவற்காரன் சிரித்து நிச்சேட் மோசம்போகவில்லை, நான்தான் அந்தக்காகம், இங்கே பாருங்கள், என்னுடைய தலைமுதல் அடிவரையுங் கறுப்புடுப்பிருக்கிறதே நானொரு பெரியகாகம், தம்பி என்னுடனே வா, நான் உனக்கு ஆகாரம் இருக்கிற இடத்தைக் காட்டுவேனென்று சொல்ல, நிச்சேட் கூடிப்போனான். அந்தத் துரைமகனே இவனைக் கூட்டிக்கொண்டு தன் வீட்டுக்குப்போய் ஒரு பெட்டி நிறைந்த ஆகாரங்களைக் கொடுத்தனுப்பினார். அவன் வாங்கிக்கொண்டு தன் வீட்டுக்குவந்து தாய்கையில் கொடுத்தான். மறுபிள்ளைகள் அதைக்கண்டு கையுடனே கைகொட்டி களியாட்டுக்கொண்டார்கள். பின்பு எல்லாருங்கூடி அந்த ஆகாரத்தைத் தேவனே தந்தாரென்று நன்றியறிந்த இருதயத்துடனே அவரைத் தோத்திரித்துப் புசித்தபின் நிச்சேட் எழும்பிப்போய் வாசற்படியில் நின்று காகத்தின்னையில் எங்களுக்குப் போசனம் அனுப்பின தயவுக்காக உமக்குத் தோத்திரமென்றான். இதினால் விசுவாசிகளுடைய பிரார்த்தனை அவம்போகாதென்பது தெளிவு. குழந்தைகளுடைய விண்ணப்பத்தைத் தேவன் கிருபையாய் கேட்கிறாரென்பது சகல பிள்ளைகளுக்குந் தைரியந்தரத்தக்கது.



மேலே காண்கின்ற படம் எகிப்தில் தோன்றும் காட்சியைக் குறிக்கின்றது. எகிப்து எங்கேயிருக்கின்றது? எகிப்தின் பூர்வீக அரசர்களாரென்றறிவீர்களா? தன் சகோதரரால் விலைக்கிரயமாக விற்கப்பட்டு எகிப்துக்குப் போனதார்? எகிப்தின் அரசனுக்கு அவன் எவ்வித உபகாரியாக இருந்தானென்று அறிவீர்களா?

எகிப்திலே மழைபெய்கிறதில்லை. இத்தேசம் நதிப்பெருக்கினால் நீர்பாய்ச்சப் படுகின்றது. அந்த நதியின்பெயர் தெரியுமா? அந்நதி ஆனிகடைக்கூற்றிற் பெருகத்துவங்கிக் கம்பெருக்காகப் புரட்டாசிமாதம்மட்டும் பெருகும். பின் வரவரக்குறைந்து வற்றும். அதினால்நிலம் மிகச் செழுமையுள்ளதாக விருக்கும்.

படத்தில் பிறமிட்ஸ் (Pyramids) என்று சொல்லப்படும் இரண்டு பலபுசக் கோபுரங்கள் இருக்கின்றவை. அவை எப்பொழுது என்ன நோக்கத்துக்காகக் கட்டப்பட்டதென்று ஒருவரும் அறியார்கள். அவை நயிலாற்றின் மேற்குப்பக்கத்திலிருக்கும் கயிரோ (Cairo) நகரிக்குச் சமீபமாயிருக்கின்றன. மகா உன்னத கோபுரம் அடியில் சுற்றுக [illegible] அடி சதுரமாகவும், உயரத்தில் [illegible] அடியாகவும் இருக்கின்றது.

படத்தில் இன்னும் மனுஷமுகமுள்ள ஒரு ரூபமிருக்கின்றது. இதை ஸ்பின்கிஸ் (Spinx) என்பார்கள். அது ஒரு கோபுரத்துக்குச் சமீபமாக கன்மலையில் வெட்டப்பட்டிருக்கின்றது. பிரமாண்ட ரூபமாயிருக்கிறது. மனோரதியமாக உண்டுபண்ணப்பட்ட சியாக்கை என்பார்கள். தலை மனுஷதன்மையும் உடல் மிருகதன்மையுமாக விருக்கும். உடல் [illegible] அடி நீளம். இச்சிலவு அதின் கால்களுக்கூடே ஒரு ஆலயமும் நகங்களுக்கூடே பின்னொரு ஆலயமுங் காணப்பட்டன.

எகிப்தில் வசிக்கும் முக்கால்வாசிச்சனம் அராபியர். மற்றவர்கள் பூர்வீக எகிப்தியரும் துருக்கருமாயிருக்கிறார்கள். துருக்கரே அத்தேசத்தை ஆளுகிறார்கள். எகிப்தியர் மகமதுமார்க்கத்தாராக இருக்கிறார்கள்.

காமுடைய புத்திரனாகிய மிஸ்ராயீம் என்பவன் பேரால் இத்தேசம் அழைக்கப்பட்டது. (ஆதி. ௰: ௧) அவனே எகிப்தியரின் பூர்வீகபிதா. சில வேளைகளில் காமுடைய தேசம் என்றும் அழைக்கப்பட்டது. (சங். ௱௫: ௨௩, ௨௭, ௱௬: ௨௨.) இன்னும் இராகாபின் தேசமென்றுஞ் சொல்லப்படுகிறது. (சங். ௮௯: ௧௦; ஏசா. ௫௧: ௯)

## நமக்காகப் பாடடைந்தார்.

ஏறக்குறைய எழுபது அல்லது எண்பது வருஷத்துக்குமுன் இந்தியாவிலுள்ள திப்புசாய்பு என்னும் இராசாவுக்கும் இங்கிலிஷ்காரருக்கும் ஒரு வல்யுத்தம் நேரிட்டது. திப்புசாய்பு என்பவர் இங்கிலிஷ்காரருடைய இராணுவத்திலுள்ள உத்தியோகஸ்தரிற் பலரை சிறைப்பிடித்திருந்தார். அவர்களுள் பேயட் (Baird) என்ற பேருள்ள ஒருவனுண்டு. சிறைபிடிக்கப்பட்டவர்களுக்கு விலங்குகள் போடும்படிக்கு சாய்புவின் உத்தியோகஸ்தன் ஒருவன் விலங்குகளைக் கொண்டுவந்தான். காயப்பட்டு வருத்தமாயிருப்பவர்கள் தங்களுக்கு விலங்கிடப்படுமென்று எண்ணவில்லை. பேயட் என்பவர் மிகவும் காயப்பட்டவராய் பெலட்சயப்பட்டு மிகவும் வருத்தமுள்ளவராகவிருந்தார். அவருக்கு விலங்கிடப்படாதென்று ஒரு கிழஉத்தியோகஸ்தன் சொன்னான். அப்பொழுது அவ்வுத்தியோகஸ்தன் இங்கே சிறையாக்கப்பட்ட அவ்வளவுபேருக்கும் போதிய விலங்குகள் என்கையிலிருக்கின்றன. அவைகள் எல்லாவற்றையும் அவர்கள் கால்களிலிட வேண்டுமென்றான். அப்படியானாலிரண்டையும் என்கால்களிலிடு. அந்தவாலிபனுக்குப் போடாதே என்றான், கடைசியாக பேயட் என்பவர் இஷ்டமடைந்து அந்தப் பட்டினத்தைப் பிடித்தார். ஆனால் இவருடைய விலங்குகளை தன் கால்களிலிடச் சொன்னவர் சிறைச்சாலையிலிருந்துதானே மரித்துவிட்டார்.

இரட்டை விலங்கிடப்பட்டாரே! மறியலிலுள்ள எல்லாருடைய விலங்குகளையும் இவருக்கிட்டாலென்ன? தன்னிஷ்டமுள்ளவராகவும்பெரியவராகவுமிருப்பதை விட்டுத்தனைத்தானே அடிமையாக்கி சிங்காரமானமகிமையுள்ள வாசஸ்தலத்தைவிட்டு இருள்நிறைந்த சிறைச்சாலையில்வந்து கூடவசித்து அவர்களுடைய விலங்குகளைப்பூண்டு அவர்களுக்குவரும் அடிகளைப்பட்டு அவர்களிஷ்டமடையும்படி அவர்களிடத்தில் நின்றுமரித்தாரே! இப்படிக்கொத்தகாரியம் நிறைவேறிற்றே! தேவகுமாரனுடைய கிருபையை அடைவோர் எல்லாருடையவும் விலங்குகள்தெறித்து சிறைச்சாலைக்கதவுகள் திறக்கப்பட்டிருக்கின்றது.

## சீவசாட்சி.

ஒரு வைத்தியர் தனது வைக்கோல் பலமுறைகளிலுங் காணாமற்போகிறதால் ஆரோ திருடுகிறார்களென்றயிர்த்து திருடன் வந்து போகிற வழிக்கருகில் மறைவிளக்கொன்று கையில் வைத்துக்கொண்டு ஆளை மட்டிட்டறியும்படி நின்றார். அவரறிந்த ஒரு மனுஷன் வைக்கோற்பட்டடைக்குச் சென்று போதிய வைக்கோல் கட்டிக்கொண்டு புறப்பட்டுப் போனான். வைத்தியர் யாதொரு அசுமாற்றங்காட்டாமல் கள்ளன் பின்சென்று மறைவிளக்குத் திரியை எடுத்து வைக்கோற்கட்டின்மேல் வைத்துவிட்டு மெதுவாகத் திரும்பினார். சற்று நேரத்தால் வைக்கோல் படபடென்று எரிந்து பெருஞ்சுவாலையானது. தான் எரிந்துபோகாதபடி திடீரென வைக்கோலை எறிந்துபோட்டு ஓடினான். வைத்தியர் தனது சொந்த மனைவிக்குத்தானும் இதை அறியாதபடி தன் உள்ளத்தில்வைத்துக்கொண்டார். இரண்டொரு நாளையின்பின் திருடன் மனவருத்தமுள்ளவனாய் தான்செய்த அருவருப்பான பாவத்தைக் குறித்து வைத்தியருக்கறிவித்தான். தான் திருடின வைக்கோற்கட்டின்மேற் தேவன் தமது உக்கிரத்தைக் காட்டும்படி வானத்திலிருந்து அக்கினியை வருஷித்து எரித்தார். நான் தப்பினேனென்றான். இவ்விதமாக இனிமேற் செய்யாதிருப்பாயாகில் நான் உனக்கு மன்னித்துவிடுகிறேன் என்று வைத்தியர் சொன்னார்.

படிப்பனையைப் பாருங்கள். அவனுடைய சீவசாட்சி சமாதானத்தை அவனுக்குக் கொடுக்கவில்லை. பலநாளையிற் கள்ளன் ஒருநாளைக் ககப்படுவான். நியன் மறுபேர் கண்காணாமற் தப்பினாலும் தண்டனைக்குத் தப்பமாட்டான்.

## பெற்றாருக்கு அவமரியாதை செய்தலும் நன்றியீனங் காட்டுதலும்.

இவ்வூரிலிருக்கும் பெற்றாரைப் பிள்ளைகள் பிறர்க்குமுன் மரியாதையாகவும் அந்தரங்கத்தில் அவமரியாதையாகவும் நடத்துகிறார்கள். நாலுபேர் முகதாவில் தன்பிதா வருகிறதாகக் கண்டால் திடீரெனத் தானிருந்த இடத்தைவிட்டெழும்பி தன்தோழிலிருக்கும் உத்தரீயத்தையும் எடுத்துக் கைகட்டி வாய்பொத்தி நிற்கிறார்கள். அது தேசாசாரத்திற்குச் சரி. "அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்." ஆனால் அவர்களுக்குப் போதிய அன்னவஸ்திரங்களைக் கொடுத்துக் காப்பாற்றுகிறார்களா என்பதை நீங்களே சிந்தித்துப்பாருங்கள். விவரம் சொல்லப் பெருகும்.

"பெற்றமனம் பித்தம் பிள்ளைமனங் கல்லுமென்ற" வார்த்தை பொய் போகாது. பிள்ளைகள் "ஆல்போற்றழைத்து அறுகுபோல் வேரூன்றிச்" செழிக்கவேண்டுமென்று அவர்கள் இளமைதொடுத்து முதுமை மட்டுக்கும் ஓராசை பேராசையுள்ளவர்களாகவிருக்க அவர்கள் தங்கள் பெற்றார் எப்பொழுது சாவார்கள்; அறுபதுவயசுசென்றால் வீட்டுக்கு நாய்வேண்டாமென்பதுபோற் பாவிக்கிறார்கள். இதுகாரியத்தை விளக்குவதற்குப் புதினப்பத்திரிகை ஒன்றிற்கண்டதை இவ்வூர்த் தன்மையாகச் சிலகாரியத்தை மாற்றி எழுதுகிறேன்.

ஒருபிதா ஆறுபிள்ளைகளைப் பராமரிப்பான்; ஆறுபிள்ளைகள் ஒருபிதாவைப் பராமரிக்கமாட்டார்களென்பது ஒரு பழமொழி. ஒரு பிதாவானவன் தன்வசமிருந்த ஆடைஆபரணங் காணிபூமி காசுபண்டம் எல்லாவற்றையும் தனது ஆறுபிள்ளைகளுக்கும் பங்கிட்டு தனக்கு ஒரு சல்லியும் வையாமற் தன் பிள்ளைகள் பராமரிப்பார்களென்று நம்பியிருந்தான். அப்படியே தழன்றகாலத்தில் தன் மூத்தமகனுடனிருந்தான். ஒருநாள் மூத்தமகன் பிதாவைப்பார்த்து பிதாவே எனக்கு ஒரு புத்திரன் செனனமானான். நீர் இருக்குமிடத்திற் பிள்ளைத்தொட்டில் கட்டவேண்டியது. என் சகோதரன்வீட்டில் கனஇடமுண்டு, அங்கேபோனால் நல்லதென்றான். அவ்வண்ணமே இரண்டாம் புத்திரனுடனுஞ் சிறிதுகாலமிருந்தான். கிழவன் தன வீட்டிலிருப்பதால் அலுத்து, அப்பு, உமக்குக் காங்கையானவிடம் வேணும். என் சகோதரன் அப்பஞ்சுடுகிறவன், அங்கே எப்பொழுதுங் கணப்புச்சட்டியுண்டு, அது நல்லதல்லவா என்றான். அப்படியே கிழவன் மூன்றாம் பிள்ளையுடனுஞ் சிறிதுநாளிருந்தபின்மேல் அவனுக்கும் மனம் அலுத்து, தகப்பனே, இங்கே சனங்கள் அப்பம்வாங்குவதற்கு இடைவிடாமல் வருவதினால் உச்சியாகால நித்திரைக்கு உமக்கு வசதியில்லை என் சகோதரிவீட்டுக்குப்போனால் நல்லதல்லவாவென்றான். கிழவன் நல்லதும் அப்படியே ஆகட்டுக்குமென்று மகள்வீட்டுக்குப்போனான்; அங்கேயும் சிறிதுவேளையிருந்தபின்மேல் மகளும் மனம்நொந்து, அப்பு நீ படிவழியாக ஏறி இறங்குகையில் தடதடத்து கீழே விழுவாயென்று பயப்படுகிறேன்; என்சகோதரி மேல்வீட்டில் வசிக்கவில்லை. அவள்வீடு வசதியாகவிருக்கும் அங்கே போவென்றாள். நல்லதும் அப்படி ஆகட்டுமென்று மற்றப் புத்திரிவீட்டுக்குப்போனான். கொஞ்சக்காலம் அங்கேயிருந்தபின்மேல் அவளும் மனஞ்சலித்து ஐயா நாங்கள் ஆற்ற

ளுடே இருப்பதால் கிலம் ஊறுகிறது. உன்முதிர்வயதில் இப்படிப்பட்ட வீட்டிலிருப்பது உனக்குச் சௌக்கியமல்ல என் இளைய சகோதரி வீடு மெத்தவசதியென்றான். இது சரிதானென்று கிழவன் ஒப்புக்கொண்டு சடைக்குட்டிவீட்டுக்குப்போனான். அங்கே மூன்றுநாளிருந்தபின்மேல் அவளுடைய பிள்ளை தன் பாட்டனுக்குச்சொன்னது, பாட்டா ஆச்சி ஒரு மறுவீட்டுக்குச்சொன்னது அப்பு கிண்டுகிற கிடங்குதானும் உனக்கு வசதி என்றுசொல்ல, கிழவன்கேட்டு உடனே ஏக்கத்தினால் மரித்தான். பிள்ளைகளே, நற் படிப்பனைகளை இதுகாட்டும். இப்படிக்கொத்தவர்கள் தமது ஊரார் செய்வதுபோல மாரடித்து அப்பு எடா என்னைப்பெற்ற அப்பு எடா என்று புழுதியில் விழுந்து புரளுவது சரிபட்சமா. வடிவான பாடைகட்டி சாப்பறை அடிப்பித்து சவக்கிரிகைசெய்து அன்னதானம் செறித்து என் அப்பு எங்கே, ஐயோ என் அப்பு என்று ஒப்பாரி சொல்வது ஒப்பனைக்கல்லவா? அழுவாரழுவாரெல்லாந் தன்கரைச்சல் திருவன் பெண்டிருக்கு அழுவார் ஒருவருமில்லாததுபோலக் கிழவனுக்கு இந்த ஆறுபிள்ளைகளில் எந்தப்பிள்ளை அழுதது. செத்தபின் செலவிடுவதைச் சாகுமுன் செலவிட்டுக் கிழவனுக்குக்கொடுத்தால் எவ்வளவு ஆறுதல். கிழவன் மரணமும் அமைதியாய்ச் சமாதானமாயிருக்குமே.

## கருவில் அழி.

பிள்ளைகள் இளமையிலே தங்கள் முதிர்வயதின் பழக்க வழக்கங்களைப் பயிலுகிறார்கள். தீய பழக்கங்களைப் பழகினால் பின்விடுவது பிரயாசம். அது நாசத்துக்குக் கொண்டுபோம். நற்பழக்கங்களைப் பழகினால் உங்களைக் கனிசமுள்ளவர்களாக்கிச் சீவனுக்குக் கொண்டுபோம். நீங்கள் இப்பொழுது எவ்வித பழக்க வழக்கங்களைப் பயிலுகிறீர்களென்று ஆராயுங்கள். தீயபழக்கமாகில் இப்பொழுது கொல்லுங்கள். இப்படி நீங்கள் செய்வதற்கு ஒரு கதை சொல்லுகிறேன். நயில் ஆற்றங்கரையில் பென்னம்பெரிய ஒரு முதலை வாசம்பண்ணி அடுத்ததேசங்களிலுள்ள ஆடுமாடு இடையர் முதலியவைகளை நாசம்பண்ணி அழித்துவந்தது. அநேகர் திரண்டு இதைக்கொல்லும்படி பிரயாசப்பட்டுங் கூடாமற்போயிற்று. சனங்கள் எல்லாரும் ஒருமித்துக் கூடி இதற்கென்னசெய்வோமென்றாலோசிக்கையில், ஒரு கீரிப்பிள்ளை அவர்கள் முன் வந்து, நீங்கள்படுங் கஸ்தி எனக்குத்தெரியவருகிறது. இதற்கு என்னால் யாதொரு உதவி செய்யக்கூடாது; ஆனால் இனிமேல் நீங்கள் நடக்கவேண்டிய புத்தியைமாத்திரம் உங்களுக்குச் சொல்லுகிறேன், சற்று ஆலோசித்து நடப்பீர்களாகில் உங்களுக்கு இவ்வளவு தொல்லை நேரிடாது. தீமையைச் செயிப்பது நல்லது, தீமைவராமற் காப்பது அதி உத்தமம். முதலை சிறுகுட்டியாகப் பெலனற்றிருக்கையில் நீங்கள் அதைக் கவனிக்கவில்லை. அது பருத்து உரத்து பெருமுதலையானதின்மேற் பயந்து ஓடுகிறீர்கள். நான் ஒரு அற்பபிராணி. முதலை எனக்கு மெத்தப்பயம். உங்களைப் பார்க்கிலும் தேசத்துக்கு நன்மைசெய்கிறேன். எப்படியெனில் கருவில் அழிக்கிறேன். முட்டையை நாசப்படுத்துகிறேன். ஒரு முதலையை எப்படி அகற்றலாமென்று நீங்கள் ஒருமாதக்காலமாக யோசிக்கிறீர்கள், அதுவும் உங்களாற் கூடவில்லை. நான் ஒருகாலையில் ஐம்பது முதலை கொல்லுகிறேன் என்று கீரி சொன்னது.

பிள்ளைகளே, கீரிப்பிள்ளையின் முன்மாதிரியைப் பின்பற்றுங்கள். உங்கள் இருதயத்தில் தீமை கருக்கூட்டும்போது கொல்லுங்கள். பின் பார்ப்போமென்றால் முதலையைப்போல உங்களைக் கடித்துக்கொல்லும். இப்படிக் கொல்வதற்கு உங்கள் பெலனைக் கொண்டல்ல யேசுவின் பெலனைக்கொண்டே செய்யுங்கள். சாத்தானே பெரிய முதலை. அதை எங்கள் யேசுநாதர் வென்றதுபோல முதற் சோதனையில்வெல்லுங்கள்.



மேலே காட்டப்பட்டிருக்கிற இந்தப் படத்தில், அநேக சனங்கள், நல்ல அலங்காரமாய், உடுத்துக்கொண்டு நிற்பதையும், வேறு சிலர் ஏதோ தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு நிற்பதையும், இன்னுஞ் சிலர் சமூரில் நல்ல தகுந்த இடத்திற் சடங்கு நடக்கும் வேளையிற் செய்வதுபோல, நிலபாவாடை விரித்துக் கொண்டு நிற்பதையுங் காண்கிறீர்கள். அவர்களுக்கப்பால் என்ன தோற்றுகிறது. ஒரு அலங்காரமான அரண்மனை. இதென்னவென்று சொல்வீர்களா? எங்கள் இரட்சகர் பூமியிலிருந்தகாலத்திற் பேசின உவமைகளிலொன்றாகிய, பத்துக் கன்னிகைகளைப்பற்றிய உவமையைக் காட்டும்படம். மத். ௨௫: க—௧௨. வசனங்களை எடுத்து வாசித்துப்பாருங்கள். கர்த்தராகிய யேசுக்கிறிஸ்து தம்முடைய ஊழியத்திற் கவலையீனமாயிருப்பது எவ்வளவு மோசமென்பதை எங்களுக்கு உணர்த்தும்படி, இந்தப் பத்துக்கன்னிகைகளின் உவமையைப் பேசினார். இந்த உவமை உலகத்திலுள்ள, கிறிஸ்துவின் திருச்சபையைக் காட்டும். புத்தியுள்ள ஐந்துபேரும், கிறிஸ்து சபையிற் சேர்ந்து, மனதார அவரைப் பின்பற்றிநடக்கிற மெய்க்கிறிஸ்தவர்கள். புத்தியற்றவர்களோ, கிறிஸ்து சபையிற் சேர்ந்து, தங்களைக் கிறிஸ்தவர்களென்று சொல்லியும், தங்கள் இருதயத்தைத் தேவனுக்குத் தூரப்படுத்தி நடக்கிறவர்கள். எண்ணையென்பது இருதயத்தில் ஊற்றப்படும் பரிசுத்தாவியின் கிருபை. மணவாளனென்பது, யேசுக்கிறிஸ்து. வீடென்பது, நித்திய மகிமைப் பிரகாசமுள்ள மோட்சம். ஐந்து கன்னிகளுந் தங்கள் தீவட்டிகளுடன் எண்ணையைக் கூடக்கொண்டுபோனார்கள். மணவாளன் எந்தநேரத்தில் வருவாரென்பதை அவர்கள் அறியாமலிருந்தபடியால், இப்படி ஆயித்தமாயிருப்பது, மெத்த அவசியமாயிருந்தது. அவ்விதமே ஆயித்தமாயிருந்தவர்களே, மணவாளனுடன் உட்பிரவேசித்தார்கள். மற்றவர்களோ, இருளும் அந்தகாரமுமான வெளியில்விடப்பட்டார்கள். இவ்விதமாகவே கிறிஸ்துவின் திருச்சபையிற் சேர்ந்திருக்கிறவர்களின் முடிவுமிருக்கும். அநேக சபையார் இந்தப் புத்தியற்றவர்களைப் போலவே, தங்களுக்குத் தேவகிருபை உண்டென்று எண்ணி, மெய்யாய் மனஸ்தாபப்படாமல், தங்களைத் தாமே வஞ்சிக்கிறார்கள். இவர்களுடைய இருதயத்தில், மெய்யான தேவபத்தி யற்றவர்களாய், வெளிக்குமாத்திரங் கிறிஸ்தவர்களென்ற பேரைத் தரித்துக்கொள்ளுகிறார்கள். இது எவ்வளவுமோசம். இவர்களே, மேலே காட்டிய உவமையிற் சொல்லப்பட்டிருக்கிற புத்தியற்ற கன்னிகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மணவாளனாகிய யேசுக்கிறிஸ்து வரும்பொழுது, பிறம்பே தள்ளப்படுவார்கள். அருமையான பாலியரே, நீங்களுங், கிறிஸ்துவினுடைய சீஷரென்ற நாமந் தரிக்கப்பெற்றவர்களாயிருக்கக்கூடும்.

உங்களில் அநேகர் சிறுவயசிற் தேவனுக்கென்று ஒப்புவிக்கப்பட்ட பிள்ளைகளாயிருக்கிறீர்கள். உங்கள் இருதயங்களிற் தெய்வகிருபை என்னும் எண்ணையை உடையவர்களாயிருக்கவுங் கூடும். அதைத் தேவன் உரைத்தபடி, நீங்கள் தேடாமலும், இன்னும்முற்றாய், மணவாளனுடைய யேசுக்கிறிஸ்துவைச் சேர ஆயித்தமற்றவர்களாயும் இருக்கக்கூடும். பின்னை உங்கள் கவலையீனத்தினால், அவருடைய மகிமையுள்ள, பிரகாசமான இடத்திற் சேரத்தக்கவர்களாய் இருப்பது எவ்வளவு புலம்பப்படத்தக்க காரியமென்பதை உணர்ந்து பார்ப்பீர்களாக. பிள்ளைகளே, அநேக முறைகளில் உங்கள் உறவார் அயலகத்தாருடைய மரணத்தினால், நீங்களும் மணவாளனாகிய கிறிஸ்துவைச் சந்திக்கப்போகுங் காலம் வருமென்று தேவனால் எச்சரிக்கப்பட்டிருக்கவில்லையா? ஆகையால் இப்போதே உங்களை முற்றாய் இரட்சகருக்கொப்புவித்து, உங்களை ஆயித்தப்படுத்தி நடவுங்கள். அப்போது உங்கள் மணவாளனாகிய யேசுக்கிறிஸ்துவுடன் மேலான இராச்சியத்தில் வாசம் பண்ணுவீர்கள்.

## முதற்கடமை.

ஜெலாந்து தீவார் விடிந்தெழும்பினவுடன் அந்தந்த வீட்டுச் சமுசாரமாகச் சேர்ந்து தேவவசனத்தைவாசித்துபாடிபிரார்த்தனைபண்ணின பின் தங்கள் வேலைகளிற் கைவிடுவார்கள். அத்தீவார் தேவனை நோக்கி ஸ்தோத்திரித்து பின்னவன்றிப் பின்னொருவரையும் பின்னவமாட்டார்கள். அவரை நோக்கிப் பிரார்த்தித்ததின் பின் சமுசாரத்தாரைப் பார்த்து தேவன் இந்த நாளை உத்தமநாளாகச் செய்வாராகவென்பார்கள்.

பெற்றாரே, இது எப்படிக்கொத்த வழக்கம், இவ்வழக்கத்தை உங்கள் வீடுகளிலேற்படுத்தினாலாகாதா? உங்கள் பிள்ளைகள் இப்பழக்கத்தைப் பயின்றால் உத்தமராவார்களே. தேவனை முதல் பின்னவுங்கள், பின் மற்றவர்களையும் மற்றவைகளையும் பின்னவுங்கள்.

## பூமிசாஸ்திரக்கேள்வி.

### ஆசியா.

க. ஆசியாவின் நான்கெல்லையும் என்ன? வடக்கே வடசமுத்திரம், தெற்கே இந்துசமுத்திரம், கிழக்கே பாசிபிக்குச்சமுத்திரம், மேற்கே யூறல் மலையும், கறுத்தக்கடலும், மத்திதரணியாக்கடலும், காணற்கடலுமே.

உ. ஆசியா எந்த அட்சத்தில் எத்தனையாம் பாகைக்குள் இருக்கிறது? வடஅட்சம் ௧ம் பாகை துவங்கி ௭௰ம் பாகைவரைக்குமிருக்கின்றது.

௩. எந்தத் தேசாந்திரத்தில் எத்தனையாம் பாகைக்குள்ளிருக்கிறது? குணதேசாந்திரம் ௨௬ம் பாகைதுவங்கி ௱௯௰ம் பாகைவரைக்கும் குடதேசாந்தரத்தில் ௰ பாகையுள்ள ௱௭௰ம் பாகைவரைக்குமிருக்கின்றது.

௪. இதின் நேசவார்த்தியம் என்ன? ௨ம் பாகை துவங்கி ௭௫ இ ப்பாகைவரைக்கும் ௰௩ட்டணமும் ௭௫இப் பாகைதுவங்கி ௯௰ம் பாகைவரைக்கும் சமசீதள வட்டணமும் ௯௰ம் பாகைதுவங்கி ௭௰ம் பாகைவரைக்குஞ் சீதனமுமாயிருக்கின்றது.

ரு. ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் நடுவேயிருக்கிற கடல்களென்ன? கறுத்தக்கடல் மத்தித்திரணியாக்கடல் என்பவைகளே.

௬. ஆசியாவுக்கும் ஆபிரிக்காவுக்கும் நடுவேயிருக்கிற கடல் என்ன? காணற்கடல்.

எ. கிழக்கேயிருக்கும் ஐந்துகடல்களும் என்ன? காமற்ஸ்கற்கா, ஒகற்ஸ்கு,யாப்பான், யெல்லோ, சீனக்கடலென்பவைகளே.

அ தெற்கேயிருக்கும் குடாவும் கடலுமென்ன? வங்காளக்குடாவும் அராபியன் கடலுமே.

௯. அராபியன் கடலுக்குள் பாயும் குடாக்களென்ன? கற்ச, கம்பே குடாக்களே.

௰. சீனக்கடலுக்குள்பாயும் குடாக்களென்ன? சீயம், தொங்கின் குடாக்களே.

௰க. ஆசியாவையும் அமரிக்காவையும் பிரிக்கிற ஒடுக்கக் கால்வாயென்ன? பெரிங்ஸ்கால்வாய்.

௰உ. எந்த ஒடுக்கமாகி ஆபிரிக்காவையும் ஆசியாவையும் இணைக்கிறது? சுவெஸ்.

8s. and 7s.
"Jesus, tender Shepherd, here me"

## நல்மேய்ப்பருக்கு ஓலம்,

௧. யேசு, நல்ல மேய்ப்பன், கேளும்,
குட்டியேனை ஏற்றிடும்;
ஆதல் தந்து, நன்றாய்ப் பேணும்,
தஞ்சல் செய்ய அருளும்.

௨. பகல் போலே காரிருளும்
உமக்கொன்றாய்த் தோன்றுமே,
அந்தி சந்தி வேண்டல் கேளும்,
கேளும்,--நல்ல மேய்ப்பரே.

௩. உற்றார், பெற்றார், காத்துக்கொள்ளும்,
பாவம் நீக்கும் தயவாய்
நல்ல ஆசீர்வாதஞ் சொல்லும்,
கிட்டவே, சமீபமாய்.

௪. செத்தால், நல்ல மேய்ப்பர் கையில்
ஏந்தப்பட்ட பிள்ளையாய்,
என்றும் மோட்ச மகிமையில்
வாழுவேன், சந்தோஷமாய்.

## சத்தியவேதக்கேள்வி.

௪ம் பாடம்.

யேசுவின் செனனம். லூக். ௨: ௧—௭.

௧. அகுஸ்து என்பவர் ஆர்? உரோமதேசத்தின் சக்கிரவர்த்தி.

௨. பலஸ்தீனதேசத்தின் குடிமதிப்பு ஏன் எழுதப்படவேண்டியது? அவர்கள் உரோமரால் ஆளப்பட்டதினால்.

௩. பலஸ்தீனாவின் குடிகளார்? தேவன் தெரிந்த சனமாகிய யூதரே.

௪. இக்காலத்தில் மரியாளும் யோசேப்பும் எங்கேயிருந்தார்கள்?

௫. தங்கள் நாமங்கள் எழுதப்படும்படி எவ்விடத்திற்குப் போனார்கள்?

௬. பெத்லகேமில் வசித்த மேன்மையான இராசா ஆர்? தாவீது.

௭. நாசரேத்துக்கும் பெத்லகேமுக்கும் எவ்வளவு தூரம்? ஏறக்குறைய எழுபதுமைல்.

௮. பெத்லகேமில் சம்பவித்த விசேஷம் என்ன?

௯. யேசுவை எவ்விடத்தில் வைத்தார்கள்?

௰. மரியாளும் யோசேப்பும் பசுத்தொட்டியில் ஏன் தங்கினார்கள்?

௰௧. யேசு ஐசுவரியனாகவோ தரித்திரனாகவோ பிறந்தார்? மத். ௮: ௨௰.

௰௨. அரமனைகளில் யேசுவிலும் பெரியவராக ஆரும் பிறந்திருக்கிறார்களா? இல்லை, அவர் இராசாதிராசாவும் கர்த்தாதிகர்த்தரும் சமாதானப்பிரபுமாகப் பிறந்தார்.

௰௩. தரித்திரராகப் பிறப்பது கனவீனமா?

௰௪. தரித்திரரை நாம் எப்படி நடத்தவேண்டும்?

## இல்லப்படிப்பு.

பின்னால்வருவன அழியா எழுத்தாக ஒவ்வொருவீட்டின் முகப்பிலும் வரைந்துவைப்பது உத்தமமென நம்புகிறேன். பெற்றாரிதைக் கவனிக்கவும்.

௧. பிள்ளைப் பிராயத்தில் பிள்ளைகள் கையுடனே கீழ்ப்படிவது அவசியமெனப் பயிற்று.

௨. சாந்தத்துடன் கலங்கா நிலையையும் உணர்த்து. நீ சொல்வதின்னதெனப் பிள்ளைகள் யதார்த்தமாக விளங்கிக்கொள்ளப் பயிற்று.

௩. நீ கொடுப்பேனெனத் தீர்மானித்து வாக்குப்பண்ணுவதேயன்றி மற்றும்படி வாக்குத்தத்தஞ் செய்யாதே.

௪. ஒருபிள்ளை யாதொன்றைச் செய்யும்படி கற்பிக்கப்பட்டால் அது எவ்வகையாகச் செய்யவேண்டுமென்பதைக்காட்டி முடிந்ததோவென்றுபார்.

௫. மனதாரப் பிள்ளைகள் கீழ்ப்படியாததற்காக ஆக்கினைபண்ணு. கோபத்துடன் தண்டியாதே.

௬. உன்னைத் தொல்லைபண்ண இடங்கொடாதே.

௭. பிள்ளைகள் வெடுவெடுப்பும் மூர்க்கமுமுள்ளவர்களாக நின்றால் அவர்கள் ஆறுமட்டும் அமைதியாகவிருந்து பின் அவர்கள் ஒழுங்கீனத்தைக்குறித்து சாதுவாக உணர்த்து.

௮. தருணத்திற்பண்ணுஞ் சொற்பதண்டனை இனிமேல் இப்படிச்செய்தால் பெருந்தண்டனை கிடைக்குமென்று பயமுறுத்துதலிலும் பெலனுள்ளது.

௯. பிள்ளைகள் அழுகிறார்களென்பதினிமித்தம் ஒன்றுங் கொடாதே.

௰. ஒரு நோக்கத்தைக்கொண்டு ஒருமுறை செய்யப்படாதென விலக்கினதை மறுபடி பிள்ளைகள் செய்யும்படிக்கு அந்த நோக்கத்தைக் கொண்டு இடங்கொடாதே.

௰௧. நல்லவர்களாக வருவதற்கு நிச்சயமும் லேசுவானதும் நன்மைசெய்தலெனப் போதி.

௰௨. அவர்கள் சொல்லும் விருத்தாந்தங்களை முழு உண்மையுடன் பேசப் பழக்கு.

௰௩. கோள்சொல்லித்திரிய இடங்கொடாதே.

௰௪. மனப்பாக்கியம் உடையவர்களாவதற்குத் தன் பிரியப்படி நடப்பதல்ல தன்னை ஒறுத்தல் அவசியமென உணர்த்து.

## இராணியின் பிதாவின் விண்ணப்பம்.

நமது தேசத்தையாளும் இராணியின் நாமம் விக்தோரியாவென சகலரும் அறிவீர்கள். அவருடைய பிதா வியாதியாகவிருந்து காலஞ்செல்லுகிற தறுவாயில் தமது பிள்ளையாகிய விக்தோரியாவைக் கொண்டுவந்து தமது பக்கலில் நிறுத்தச்சொன்னார். அப்படி நிறுத்தினதின்மேல் எவர் மனதையும் உருக்கத்தக்க ஒரு பிரார்த்தனையைப்பண்ணினார். அவர் தமது பிரார்த்தனையின் கடைசிப்பகுதியிற் சொன்னதாவது, இச்சிறுபிள்ளை எப்பொழுதென்குதல் இங்கிலாந்தின் இராணியாக வருகில் சனங்களைத் தேவபயத்துடன் ஆளும்படி அனுக்கிரகம்பண்ணியருளும் தேவனேயெனப் பிரார்த்தித்துப் பிள்ளையை எடுத்துக்கொண்டு போங்களெனக் கட்டளையிட்டார். இதுவே அவர் தமது புத்திரியைக் கடைசியாகத் தரிசித்தது.

பெற்றாரே, உங்கள் கடமை என்னவென்பது விளங்கும்படி மேற்சொல்லிய காரியத்தை உற்றுச் சிந்தியுங்கள். உங்கள் பிள்ளைகள் உலகத்தில் எப்படிக்கொத்த தொழில் துறைகளில் நின்றாலும் தேவபயத்துடன் அவர்கள் அவைகளை நடத்தவேண்டுமென்ற ஆசையுடன் அவர்களோடு பிரார்த்திக்கிறீர்களா? இராணியின் பிதாவின் விண்ணப்பத்தை தேவன் கேட்டாரென்பதை விக்தோரியாவின் அரசாட்சியே திருஷ்டாந்தப் படுத்துகின்றது.

## யானையின் தீவிரபுத்தி.

சந்திரநாகூரில் ஒரு யானைநின்றது. அது மனுஷருடன் ஊடாடி நடமாடும். சனங்களுடன் மிகவும் பழகினது. அது எவர்கள் வீட்டிலுஞ்சென்று அவர்களுடன் போசனம்வாங்கித் தின்னும். ஒருநாள் வெகுசனம் ஒரு காட்டிற் கூடி விருந்துண்கையில் இந்த யானையும் அவ்விடஞ்சென்று தன் துதிக்கையைநீட்டிப்பழவகைகளைக்கேட்டது. அவ்விருந்திலிருந்தஒருவர் ஒன்றுங் கொடுக்கிறதில்லையெனச் சாதித்ததால் யானையும் அவரை மிகவுந் தொல்லைபண்ணிக்கொண்டுநின்றது. அப்பொழுது அவர் தன் கையிலிருந்த இரும்பு முள்ளினால் துதிக்கையில் நோகும்படி குற்றினார். உடனே யானை அவ்விடத்தைவிட்டு ஒரு மரத்தண்டையிற்போய் எறும்புகள் நிறைந்த ஒருகொப்பை முறித்துக்கொண்டு மறுபடியும் அவ்விடத்திற்குத் திரும்பி முன் தன்கையிற் குற்றினவருடைய தலையின்மேற் கொப்பிலுள்ள எறும்புகளை உதிர்த்தினது. உடனே எறும்புகள் தேகமடங்கலும் சட்டைக்குட் புகுந்து அவரைக் குற்றினது. எறும்புகள் மிகுதியாகக் குற்றினதால் தடைச்சுத்தடைக்க அவைகள் விழாததினால் உடனே தன் சட்டைகளைக் கழற்றி எறிந்துவிட்டு இவைகளின் வருத்தத்துக்கு விலகும்படி தண்ணீருக்குள் விழுந்தார். மற்றும் விருந்தரோ நடந்த வர்த்தமானத்தைக் கண்டு, கெக்கட்டமிட்டுச் சிரித்து முன்னிலும் அதிகம் தயவாக யானையை நடத்திக் கன பழவர்க்கங்களைக் கொடுத்தார்கள்.

## துக்கவஸ்திரம்.

இறந்தோரைப்பற்றிய துக்கத்தைப் பற்பல தேசத்தார் வெளிப்படுத்துவதற்கு தத்தம் தேசத்துக்குரிய பழக்கப்படி விசற்பநிறமுள்ள வஸ்திரங்களைத் தரிப்பார்கள். ஐரோப்பியர் மரணத்தைநிகர்க்கும் இருளை வெளிப்படுத்துவதற்கு கறுப்பு வர்ணமுள்ள வஸ்திரந் தரிப்பார்கள். சீனரும் இந்துக்களும் இறந்தவரின் ஆவி பவித்திரமுள்ள இடமாகிய மோட்சத்திற் சென்றதைக் காட்டும்படி வெண்வஸ்திரந் தரிப்பார்கள். எகிப்தியர் மரங்கள் பட்டுப்போகுங் காலத்தில் இலைகள் பழுத்துவிழுவதால் அக்கிரமமாகவே மனுஷனும் பழுத்துவிழுகிறானென்பதைக் காட்ட மஞ்சள்நிற வஸ்திரந் தரிப்பார்கள். எத்தியோப்பியர் ஊதா அல்லது செங்கல்மங்கல்நிற வஸ்திரந் தரிப்பார்கள். ஏனெனில் மனுஷன் பூமியின் மண்ணினால் உருவாக்கப்பட்டான் மறுபடியும் மண்ணுக்கே திரும்புகிறான் என்பதைக் காட்டும்படி அப்படி உடுப்பார்கள். துருக்கையின் சிலபகுதிகளில் வசிப்போர் இறந்த ஆத்துமா ஆகாயத்திற் சென்றதென்பதைக் காட்ட நீலவன்னப்புடவை உடுப்பார்கள். மற்றுமிடங்களில் தாமிரம் அல்லது இருண்ட நீலமுள்ள செவப்பு வஸ்திரம் தரிப்பார்கள். ஒருநிறம் நம்பிக்கையையும் மற்றநிறம் துக்கத்தையுங் குறிக்கும்படியாக அப்படிச்செய்வார்கள்.

## இருதயசுத்தம்.

ஒரு சிறுபெண் தனது உவாத்தியாரிடம் மத்தேயு எழுதின சுவிசேஷத்தின் ஐந்தாம் அதிகாரத்திலுள்ள முதற் பன்னிரண்டு வசனங்களையும் வாசித்ததின்மேல் உவாத்தியார் பிள்ளையை நோக்கி, நீ வாசித்த இவ்வசனங்களிற் சொல்லியிருக்கும் எந்தக்குணம் உனக்கு இருக்கவிரும்புகிறாயென்றார். அவள் சற்றுத் தாமதித்து, ஒடுக்கவணக்கத்துடன் இருதய சுத்தமாயிருப்பதே விருப்பமென்றாள். இக்குணத்தை விரும்புவதற்கு முகாந்திரமென்னவென்க, இருதயமாத்திரஞ் சுத்தமாயிருக்கில் மற்றுங் குணங்களெல்லாம் எனக்குள்ளதென்பதற்குச் சந்தேகமில்லை என்றாள். இதுவே சரியான புத்தியுள்ள மறுமொழி. தேவனுஞ் சொல்லுகிறார் "ஜீவன் தோன்றுகிற உன் இருதயத்தை மிகவுஞ் சாக்கிரதையோடே காத்துக்கொள்." தேவன் தமது ஆவியின் அனுக்கிரகங்களை இருதயத்திலே ஊற்றுகிறார். இருதயத்திலிருந்தே ஆரோக்கிய வாக்குகள் உதட்டிற் பிறக்கும். அதினால் இருதயம் சரியான தன்மையில் இருக்கிறதெனவறியலாம்.

## நன்மறுமொழி.

ஒரு சிறுபிள்ளையை ஒரு வயோதிப மனுஷி பார்த்து நீ எப்படி அதிக நன்மைசெய்யக் கூடுமென்று கேட்க, என்னாற் கூடியவளவு நல்லவனாயிருப்பதால் அதிக நன்மை செய்வேனென்றான். பிள்ளைகளே, இக்கேள்வி உங்களிடத்திலுங் கேட்கப்படுகில் என்னமறுமொழி சொல்வீர்கள்? நன்மறுமொழியா? உற்றுச் சிந்தியுங்கள்.

Printed and Published for the Youth's Christian Association, by N. Strong, at the Press of Ripley & Strong, Manepy, Jaffna.